## பண்ணுருட்டி நகராட்சி

## *மன்ற கூட்ட அழைப்பிதழ்*

******************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **சாதாரண கூட்டம் பிலவ வருடம்** தமிழ் மாதம் **ஆனி 16**, நாள் **30–06–2022 வியாழன் கிழமை நேரம் பிற்பகல் 3.00** மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள **“பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்”** நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

# <u>பண்ணுருட்டி நகராட்சி</u>

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **சாதாரண கூட்டம்** 30–06–2022 –ந் தேதி வியாழன் கிழமை பிற்பகல் **3.00** மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **"பேரறிஞர் அண்ணா"** மன்ற கூடத்தில் நடைபெறும் **சாதாரண கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

1. **<u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>**

**<u>மன்றப்பொருள்</u>**

மாண்புமிகு மறைந்த முன்னால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஐந்து முறை தமிழக முதல்வராக பதவி வகித்தவர், திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். திரைப்பட துறையினரால் கலைஞர் பட்டம் பெற்றவரும், தமிழினத் தலைவரும், மூத்த அரசியல்வாதியும், தமிழக மக்களின் நலனில் அக்கரை கொண்டவரும் மாண்புமிகு முன்னால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு .கருணாநிதியின் சிலையினை நான்கு சாலை சந்திப்பில் பேரறிஞர் அண்ணா சிலை அருகில் உள்ள இடத்தில் நிறுவ உள்ளேன். இதற்கு ஏற்படும் செலவினை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்ளும். எதிர்காலத்தில் மேற்படி சிலையினை நகராட்சி நிர்வாகம் பராமரிப்பு செய்து கொள்ளவும், பொது மக்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி வைத்துக்கொள்ள மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழக அரசின் அனுமதியும் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

2. ஆணையர் அவர்களின் ஜீன் 2022–ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

3. நகரமன்ற தலைவர் அவர்களால் பண்ணுருட்டி நகராட்சியில் பொங்கல் வாழ்த்து 13.01.2022 அன்று நமது முரசு நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு ரூ. 9975/– நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்
கோ. எண். 1485/2022/டி2

4. பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட கடலூர் மெயின் ரோடு பழைய சர்வே எண்.334-ல் சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள கட்டுமானம் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு செயலாளர், ஆற்காடு லூர்தரன் சர்ச் மூலமாக சென்னை, உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P.No.12180/2021 ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.K.கார்த்திக் ஜெகநாத் அவர்களை ஆஜாராகி வழக்கினை நடத்திடவும் மற்றும்

வழக்கறிஞர் கட்டணம் ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்

5. பண்ணுருட்டி நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.07.2011ல் பணியிலிருந்து ஓய்வு பெற்று ஒய்வூதியம் பெற்று வரும் திரு.எம்.ஆல்பர்ட் ஞானதீபம் என்பவர் தனது ஒய்வூதியத்தினை 01.01.1996 முதல் திருத்தம் செய்து வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P.No.21314/2017ல் வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் இருந்தது. இந்நிலையில் 08.06.2022ல் வழக்கு பட்டியலில் இடம் பெற்றதில் பண்ணுருட்டி நகராட்சி சார்பாக திரு. பி. பாலதண்டாயுதம் சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வழக்கு நடத்தியுள்ளார். மேற்படி வழக்கில் ஆஜராகி நடத்தி தருவதற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 15000/—ஐ வழங்க கோரி 11.06.2022 ல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே மேற்கண்ட வழக்கு தொடர்பாக வழக்கறிஞர் கட்டணம் திரு. பி. பாலதண்டாயுதம் அரசு சிறப்பு வழக்கறிஞர் சென்னை அவர்களுக்கு தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோ. எண். 5430/2013

6. இந்நகராட்சியில் சொத்துவரி, தொழில் வரி மற்றும் குடிநீர் கட்டணம்அதிக நிலுவை வைத்துள்ள வரிவிதிப்புதாரர்களின் பெயரினை பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பார்வைக்கு பேனர் வைத்திட மற்றும் தினசரி நாளிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.883/2022/அ1**

7. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் உள்ள சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் கடை வாடகை ஆகிய இனங்களில் வரித் தொகையினை செலுத்தாமல் உள்ள அதிக நிலுவைதாரர்கள் உடனடியாக வரி செலுத்துமாறு அறிவுறுத்தப்படவும், வரி செலுத்த தவறும் பட்சத்தில் அவர்களின் பெயர் பட்டியலை தினசரி நாளிதழில் வெளியிடப்படவும், ஆட்டோ விளம்பரம் செய்யவும் மற்றும் பேனர் (Banner) விளம்பரம் செய்ய அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.50,000 நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.883/2022/அ1**

8. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20789/2021/UPA1, நாள்.16.06.2022-ல் மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் 07.04.2022 தேதிய பட்ஜெட் அறிவிப்பில் **''சாலையோர வியாபாரிகளுக்கான திட்டத்தில்''** தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட, நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமமும் இன்றி வியாபாரம்

செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 2022-2023 நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு சாலையோர வியாபாரிகளுக்கு Biometric and QR/Bar code –வுடன் கூடிய அடையாள அட்டை வழங்குதல், Certificate of vending, விரிவாக திட்ட அறிக்கை தயார் செய்யவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும், விரைவாக இப்பணியை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தகுதியான சாலையோர வியாபாரிகளை 2022-2023 ஆம் ஆண்டிற்கு புதியதாக கணக்கெடுப்பு நடத்தவும், அவர்களுக்கு சான்றிதழ் மற்றும் Biometric and QR/Bar code –வுடன் கூடிய அடையாள அட்டை வழங்கவும் மற்றும் விரிவான செயல் திட்டம் மற்றும் அறிக்கை தயார் செய்யவும் ஆகும் பணிக்கு தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூ. ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு 1.</u> மன்றம் அனுமதி வழங்கலாம்

2. இத்திட்டத்திற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் (NULM) திட்டத்திற்கான நிதி பெற்றவுடன் இச்செலவின தொகையைபொது நிதிக்கு மாற்றம் செய்யவும் அனுமதிக்கலாம் .

(ந.க.எண்.1754/2022/F1)

**9.** அரசாணை (நிலை எண்) 166 நகராட்சி நிர்வாகம் குடிநிர் வழங்கல் துறை நாள் 23.11..2016 -ன் படி நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும் வளாகங்களை ஆட்வெளிக்கொணர்வு (Out Sourcing) தனியார் நிறுவனங்கள் வாயிலாக பணியாளர்களை நியமித்து சுத்தம் செய்யும் பணிக்கான ஒரு கல்வியாண்டிற்கான செலவின மதிப்பீடு ரூ. 24.00 லட்சத்துக்கு மன்ற அனுமதியும் அதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கைக்கான செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்பதலுக்கு வைக்கப்பட்டுள்ளது

**அலுவலகக்குறிப்பு-** 1மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண்: 1684/2022/எச்2)**

**10.** தமிழக அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் “**தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம்**” மாதத்தின் 2ம் மற்றும் 4ம் சனிக்கிழமைகளில் பொதுமக்களை ஈடுபடுத்தி தீவிர துப்புரவுப் பணியும், திடக்கழிவுகள் உருவாகும் இடத்திலேயே பொதுமக்கள் அவற்றை தரம் பிரித்து வழங்கும் வகையிலான விழிப்புணர்வினை ஏற்படுத்துமாறு கூடுதல் முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சனிக்கிழமைகள் தோறும் திடக்கழிவு மேலாண்மை பற்றிய பல்வேறு நிகழ்வுகளை சுழற்சி முறையில் ஆண்டு முழுவதும் நடத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தொடர்புடைய நிகழ்ச்சிகளில் துண்டுபிரசுரங்கள், பேனர்கள், சுவர் விளம்பரங்கள் மற்றும் ஓவியங்கள் வரைதல் ஆகியவற்றின் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதனை மேற்கொள்வதற்கான தோரய செலவினம் ரூ. 2.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண் : 1813 /2022/எச்2)**

**11.** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN31 - AF 8169 டிப்பர் லாரிக்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பொருட்டு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் ஒப்பந்தப்புள்ளி கோரி வண்டியில் காணும் பழுதுகளை நீக்கம் செய்யவும், தகுதிச்சான்று பெறும் நடவடிக்கைக்குமான செலவினம் தோராயனமாக ரூ.**2.25/-** இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு-1.** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2.பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்:** 436/2022/எச்1)

**12.** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN31 - BM 7864 டிப்பர் லாரிக்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பொருட்டு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் ஒப்பந்தப்புள்ளி கோரி வண்டியில் காணும் பழுதுகளை நீக்கம் செய்யவும், தகுதிச்சான்று பெறும் நடவடிக்கைக்குமான செலவினம் தோராயனமாக ரூ.2.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு-** 1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2 பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்:** 1336 /2022/எச்1)

**13.** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN31 - BM 7864 டிப்பர் லாரிக்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பொருட்டு வண்டியில் காணும் பழுதுகளை நீக்கம் செய்யவும், தகுதிச்சான்று பெறுவதற்கும் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தரார் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | SK Motors<br>Selam Main road , Kallakurichi. | 174500/- |
| 2 | Ragaventhira Motors<br>Chennai Trunk Road, Villupuram. | 188400/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்பள்ளிகளில் SK Motors, Selam Main road , Kallakurichi. என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண்: 1336 /2022/எச்1)**

14. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் **TN31 - AF 8169** டிப்பர் லாரிக்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பொருட்டு வண்டியில் காணும் பழுதுகளை நீக்கம் செய்யவும், தகுதிச்சான்று பெறுவதற்கும் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தரார் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | SK Motors<br>Selam Main road ,<br>Kallakurichi. | 214000 /- |
| 2 | Ragaventhira Motors<br>Chennai Traunk Road,<br>Villupuram. | 217750/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்பள்ளிகளில் SK Motors, Selam Main road , Kallakurichi. என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண்: 436 /2022/எச்1)**

15. இந்நகராட்சிப் பகுதிகளில் பிரதான சாலைகளில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் வாய்கால்களில் மண் முழுவதுமாக தேங்கி, மழை நேரங்களில் தண்ணீர் செல்ல வழியில்லாமல் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. மேலும் பிரதான கால்வாய்களில் மண் சேர்ந்து இருப்பதால் தெருக்களில் உள்ள கழிவு நீர் தேக்கமடைந்துள்ளது. எனவே, நகராட்சி JCB யினை பயன்படுத்தி சாக்கடை மண் தூர்வாரிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. JCB யினால் அகற்றப்படும் சாக்கடை மண்ணை உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட வேண்டியுள்ளது. நகராட்சி வாகனங்கள் அன்றாட திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருவதால் சாக்கடை மண்ணை அகற்றுவதற்கு இரண்டு தனியார் டிராக்டர்களை வாடகை அடிப்படையில் ஒரு மாத காலத்திற்கு பயன்படுத்திக்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 2.50/-இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(கோப்பு எண் : 1814/2022/எச்2)**

16. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிகுழு 2021-22 திட்டதின் கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்கு 54.5 லிட்டர் Wheeled skid steer loader வாகனம் புதியதாக வாங்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண்.10 நாள்.11.01.2022-ல் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.05.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டைவிட ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | Dynatech, Near Katpadi Railway Gate, Tenter, Villupuram. | 25.00 | - 0.26 சதவிகிதம் குறைவு |
| 2 | TRR, Automotive, Tenter, Madhurandhagam. | 25.00 | -0.04 சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>-

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Dynatech, Villupuram. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட -0.26% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
(கோ.எண். **84**/2022/இ1)

17. பண்ணுருட்டி நகராட்சியில் KNMT (கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23) வார்டு எண் A Block 33 மூப்பனார் நகர் பகுதியில் புதியதாக பூங்கா அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.41.95 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண்.(M.S) 88 நாள்.17.06.2022-ந் தேதிய நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண். **266** / **2022** /இ1)

**18.** பண்ணுருட்டி நகராட்சிக்கு – வருவாய் நிதியின் கீழ் 2022-23 நகரமன்ற தலைவர் அலுவலக பயன்பாட்டிற்காக ஒரு ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் மதிப்பீடு ரூ.16,82,000, இலட்சத்திற்க்கும் மேலும், நகராட்சி ஆணையர்கள்/நகராட்சி பொறியாளர்கள் பயன்பாட்டிற்காக ஒரு பொலிரோ வாகனம் மதிப்பீடு ரூ.8,27,742 இலட்சத்திற்க்கும் ஆகமொத்தம் ரூ.25,09,742/- இலட்சம் மதிப்பில் இரண்டு வாகனம் புதியதாக வாங்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 1725/2022/எம்3 நாள்.24.05.2022-ல் அன்று அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பட்டியலுக்கான தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(கோ. எண். **549** / 2**022** /இ**1**)

**19.** பண்ணுருட்டி நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் (நகரம்) 2.O திட்டம் 2021-22 நிதியின் கீழ் வார்டு எண்.30 தேவராஜ் நகர் பகுதியில் வலம் மீட்பு இடம் அருகில் புதியதாக சமுதாய கழிப்பிடம் கட்டிடம் கட்டும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண்.36 நாள்.23.05.2022-ல் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.05.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டைவிட )** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s.ஸ்ரீ பிரம்மநாத சுவாமி கன்ஸ்ட்ரக் ஷன், ஒப்பந்ததாரர், பண்ணுருட்டி. | 24.00 | 0.44 சதவிகிதம் குறைவு |
| 2 | திரு.வி.சுரேஷ்பாபு, ஒப்பந்ததாரர், கடலூார். | 24.00 | 0.18 சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>-

1.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.ஸ்ரீ பிரம்மநாத சுவாமி கன்ஸ்ட்ரக்ஷன் பண்ணுருட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.44 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோ.எண். 1165/2022/இ1)

20. பண்ணுருட்டி நகராட்சியில் 2021-22கான ஒரு ஆண்டு சாதனை திட்டப்பணிகளின் விபரத்தை தமிழ் தினசரி நாளிதழான தினகரன் நாளிதழில் நாள். (20.05.2022) அன்று செய்தி வெளியிடப்பட்டதற்கு, தினகரன் என்ற நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 40,000/-யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பட்டியலுக்கான தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(கோ. எண். 1424/2022 /இ1)

நகரமன்ற தலைவர்,
பண்ணுருட்டி நகராட்சி.